**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 23–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**REA.No.1/2025 in REP.No.14/2022 in O.S.No.113/2012**

**CNR No. TNSA13-000304-2022**

வடிவேல் . . . மனுதாரர்/மனுதாரர்

/எதிராக/

முருகேசன் . . . எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவின் மீதான விசாரணையானது 23.01.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முருகேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை குறித்த காலத்தில் ஒப்படைக்காத காலதாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரரும், மேற்படி வழக்கில் வாதி என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கும் கீரிப்பட்டி கிராம சர்வே

எண்.230/3 ல் உள்ள பொது கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண்.3170 ல் பொருத்தப்பட்டுள்ள 7-1/2 HP மின் மோட்டாரிலிருந்து கிழக்கு நோக்கி 231/1B ல் உள்ள எதிர்மனுதாரருக்கு சொந்தமான நிலத்தின் வழியாக மனுதாரர் குடியிருந்து வரும் சர்வே எண்.230/3 பூமிக்கு அடியில் PVC பைப்லைன் பதித்து மனுதாரர் வீட்டிற்கு பயன்படுத்த தண்ணீர் எடுத்து செல்ல 19.06.1995 தேதியிட்ட பாக பாத்திரத்தின் அடிப்படையில் உரிமை ஏற்பட்டது என்றும், அவ்வாறு பைப் பதித்து தண்ணீர் எடுத்து செல்வதை எதிர்மனுதாரர் தடுத்ததால் மனுதாரர் O.S.No.113/2012 என்ற வழக்கு தாக்கல் செய்து 15.02.2019 தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டது என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் பாகம் பிரித்த காலத்திலிருந்தே தாவாவில் குறிப்பிட்டுள்ள பொது கிணற்றிலிருந்து அவரவர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு 2-1/2 இஞ்ச் அளவில் PVC பைப்லைன் பதித்து தான் மனுதாரர் வீட்டிற்கு அருகில் உள்ள தொட்டிக்கு தண்ணீர் எடுத்து சென்று பயன்படுத்தி வருவதாகவும், மனுதாரரின் குடியிருப்பு வீட்டை விட சுமார் 20 அடி பள்ளத்தில் கிணறு அமைந்துள்ளதால் இருவருமே 2-1/2 இஞ்ச் பைப் லைன் தான் அவரவர் வீட்டிற்கு பொருத்தி பயன்படுத்தி வருவதாகவும், 2 1/2 இஞ்ச் -க்கு குறைவாக PVC பைப்லைன் பதித்ததால் கிணற்றில் 7-1/2 HP மின் மோட்டார் அமைந்துள்ளதால் PVC பைப்லைன் மின் மோட்டாரின் வேகம் மற்றும் அழுத்தத்தை தாங்க இயலாமல் வெடித்து சேதம் ஏற்பட்டுவிடுவதாகவும், அதனால் மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2-1/2 இஞ்ச் பைப் பதித்து அவரவர் வீட்டிற்கு அருகில் உள்ள தொட்டியில் நீரை நிரப்பிக்கொண்டு குடியிருப்பு வீட்டிற்கு பயன்படுத்தி வருவதாகவும், அவ்வாறு பைப் பதித்து மனுதாரர் பயன்படுத்தி வருவதையும், எதிர்மனுதாரர் அவர் வீட்டிற்கு பயன்படுத்தி வருவதையும் காட்டுவதற்காக போட்டாக்களையும், அதற்குண்டான சிடி மற்றும் அதற்குண்டான ரசீது போன்றவற்றை நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பதாகவும், மேற்படி போட்டாக்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து, விசாரணையை தொடந்து நடத்த வேண்டியது அவசியம் என்றும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்யும்

ஆவணங்களை ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானவை என்றும், மனுதாரருக்கும் பிரதிவாதியின் தந்தைக்கும் ஏற்பட்ட பிரிவினைப் பத்திரத்தில் PVC பைப்லைன் 2 –1/2 இஞ்ச் பற்றி எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் குடிநீர் பற்றி மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பிரிவினைப் பத்திரத்திற்கு முன்பும், பின்னிட்டும் பிரதிவாதியின் நிலத்தின் வழியாக குடிநீர் இணைப்பு இல்லை என்றும், பிரதிவாதி தனது நிலத்திற்கு குழாய் கொண்டு செல்வதற்கு மாற்று வழியை பயன்படுத்துவதாகவும், மேற்படி நிலத்தை பிரதிவாதியின் தந்தை தனது சகோதரரிடமிருந்து வாங்கியுள்ளதாகவும், மனுதாரரும் அந்நிலத்தை வாங்க திட்டமிட்டுள்ளதாகவும், ஆனால் மனுதாரரின் சகோதரரும் பிரதிவாதியின் தந்தையும் மேற்படி சொத்தை பிரதிவாதியின் தந்தைக்கு விற்றுள்ளதாகவும், பிரதிவாதிக்கு எதிராக பாகப்பிரிவினை பத்திரத்தினை பொருத்து மனுதாரர் வழக்கு தொடர்ந்ததாகவும், அதில் குறுக்கு விசாரணை முடிந்த பிறகு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், பாகப்பிரிவினை பத்திரத்தில் PVC பைப்லைன் பற்றிய தெளிவான அறிக்கை இல்லை என்றும், தற்பொழுது இம்மனுவை சில புகைப்பட நகல்களுடன் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு சொந்தமான நிலத்தின் வழியாக மனுதாரர் குடியிருந்து வரும் சர்வே எண்.230/3 நிலத்திற்கு அடியில் PVC பைப்லைன் பதித்து மனுதாரர் வீட்டிற்கு தண்ணீர் எடுத்து செல்லும் உரிமையானது பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் பெற்றதாகவும், அதை எதிர்மனுதாரர்

தடுத்ததால் அ.வ.எண்.113/2012 வழக்கு தாக்கல் செய்து 15.02.2019 அன்று மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகவும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2– 1/2 இஞ்ச் பைப் பதித்து அவரவர் வீட்டிற்கு அருகில் உள்ள தொட்டியில் நீரை நிரப்பிக்கொண்டு குடியிருப்பு வீட்டிற்கு பயன்படுத்தி வருவதாகவும், அதற்குண்டான போட்டோக்களையும், சிடி மற்றும் அதற்குண்டான ரசீது போன்றவற்றை ஏற்று குறியீடு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாறாக எதிர்மனுதாரர் பாகப்பிரிவினை பத்திரத்தில் PVC லைன் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றும், எதிர்மனுதாரர் தனது நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்ல மாற்று பாதை உள்ளதாகவும், எனவே இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள போட்டோக்கள் அவசியமற்றவை என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் தாக்கல் செய்துள்ள போட்டோக்களை ஏற்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்றும், எதிர்மனுதாரர் தனது தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்து கொள்ள வாய்ப்பு இருப்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 23–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.23 18:27:50 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**1.** மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.23 18:27:57 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
REA.No. 1/2025 in
REP.No.14/2022 in
O.S.No. 113/2012
நாள் : 23.01.2026